කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

# இலங்கைக்கான பொதுவான வானிலை முன்னறிவிப்பு

தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் முன்னறிவிப்புப் பிரிவால் வெளியிடப்பட்டது.

**அடுத்த 36 மணித்தியாலங்களுக்கான பொதுவான வானிலை முன்னறிவிப்பு**
**2026 ஒக்டோபர் 23ஆம் திகதி பிற்பகல் 04.00 மணிக்கு வெளியிடப்பட்டது.**

**இலங்கைக்கு அண்மையாக விருத்தியடைந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் மேற்குத் திசையில் இலங்கையை விட்டு விலகி நகர்ந்து கொண்டிருக்கின்றது.**

**வடக்கு அந்தமான் தீவுகளுக்கு அருகில் வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு புதிய குறைந்த அழுத்தப் பிரதேசம் உருவாகியுள்ளது. இத் தொகுதி பெரும்பாலும் அதே பிரதேசத்தில் நீடித்து, 2026 ஒக்டோபர் 24ஆம் திகதியளவில் ஒரு தாழமுக்கமாக வலுவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது. அதன் பின் அது மேற்கு - வடமேற்குத் திசையில் நகர்ந்து, ஒக்டோபர் 25ஆம் திகதியளவில் ஒரு ஆழமான தாழமுக்கமாகவும், ஒக்டோபர் 26ஆம் திகதி காலையளவில் மேற்கு - மத்திய வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக ஒரு புயலாகவும் வலுவடையக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது.**

**இத் தொகுதியால் இலங்கைக்கு நேரடியான பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றாலும், இத் தொகுதியுடன் தொடர்பான காற்று வீச்சு நாட்டுக்குக் குறுக்காகப் பரவுவதால், அடுத்த சில நாட்களில் நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் மழைவீழ்ச்சியில் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.**

மேல், சப்ரகமுவ, மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் **75 மி.மீ க்கும் அதிகமான** ஓரளவு **பலத்த மழைவீழ்ச்சி** எதிர்பார்க்கப் படுகின்றது.

**இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.**

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

Rainfall amount (mm): Light: 00-12.5, Light to moderate: 12.5-25, moderate: 25-50, Fairly Heavy rain: 50 -100, Heavy rain: 100 – 150, Very heavy rain: 150 or more.

වර්ෂාපතනය(මි.මී) : සිහින් වැසි: 00-12.5, සිහින් හෝ මද වැසි: 12.5-25, මද වැසි: 25-50, තරමක් තද වැසි: 50 -100, තද වැසි:100 – 150, ඉතා තද වැසි: 150 හෝ ඊට වැඩි

மழைவீழ்ச்சி அளவு (மி.மீ): சிறிதளவு: 00-12.5, சிறிதளவிலிருந்து மிதமானது வரை: 12.5-25, மிதமானது: 25-50, ஓரளவு பலத்த மழை: 50 -100, பலத்த மழை: 100 – 150, மிகப் பலத்த மழை: 150 க்கும் அதிகமானது